

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி வார்டு 13,14,15 க்கு உட்பட்ட பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்கள் நடைபெற்றது. இந்நிகழ்வில் தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் நீலமேகம் எம்.எல்.ஏ.,கோட்டைப் பகுதி கழக செயலாளர் மேத்தா,மாமன்ற உறுப்பினர்கள் சுகாசினி முரளி, பாப்பா சொக்காரவி, வட்டக் கழக செயலாளர்கள் சண்முகநாதன்,ஶ்ரீதர், வட்டக் கழக பிரதிநிதிகள் கே.பி. எஸ்.கண்ணன், அகமது, இராமையா முரளி, பாலா, ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உடன் கலந்து கொண்டணர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, பர்கூர் தேர்வுநிலை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 1.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலைகள். சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய தார்ச்சாலை புதுப்பித்தல் மற்றும் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழைய சிமெண்ட் சாலை புதுப்பித்தல்,15வது நிதி ஆணைய நிபந்தனை மற்றும் நிபந்தனையற்ற மானிய நிதி மூலம்15. இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேவர் சாலை பணி மற்றும் மற்றும் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணி மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் ஆலப்பட்டியில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலைகள், சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணி, ஆலப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சூழல் அமைக்கும் பணி உள்ளிட்ட 4.25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை துவக்கிவைத்தும், பர்கூர் தேர்வு நிலை பேரூராட்சியில் 63 கிலோவாட் திறன் கொண்ட மின்மாற்றியை இயக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார் மதியழகன் . இந்நிகழ்ச்சிகளில் கோவிந்தசாமி, பாலன், சித்ரா சந்திரசேகர், தனசேகர், ராஜேந்திரன், சந்தோஷ்குமார், வெங்கட்டப்பன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஒருங்கிணைப்பில்

# பா.ஜ.க, தே.மு.தி.க., அ.தி.மு.க., உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில்!

கோவை, ஜூலை 26-

கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஒருங்கிணைப்பில் பா.ஜ.க, தே.மு.தி.க., அ.தி.மு.க., உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில்பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

தமிழ்நாடு மென்மேலும் முன்னேற்றமடைய பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட சூரியன், தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என உணர்ந்து கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஒருங்கிணைப்பில் சூலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பரசு, சூலூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சிபி.செந்தில்குமார், மோப்பிரிபாளையம் பேரூர் கழக செயலாளர் சசிக்குமார், செட்டிபாளையம் பேரூர் கழக செயலாளர் கனகராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் பா.ஜ.க சூலூர் வடக்கு ஒன்றிய பொருளாளர் சதீஷ்குமார்,

கோவை வடக்கு மாவட்ட தேமுதிக மகளிர் அணி துணை செயலாளர் பிரேமலதா, சூலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணியூர் ஊராட்சி தண்ணீர் பந்தல் மற்றும் கிணத்துக் கடவு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செட்டிபாளையம் பேரூராட்சி சங்கமம் நகர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கதிரவன், மணிகண்டன், சுஜிதா, மோப்பிரிபாளையம் திலீப், விஷ்வா, சதாசிவம், சூரிய பிரகாஷ், தினேஷ்குமார், கௌதம், ஜீவானந்தம், தீபன் குமார், ஈஸ்வரமூர்த்தி, பாலாஜி, சங்கர், வாசு, தமிழ்மணி, மதன், வசந்த், சந்தோஷ், சஞ்சய் குமார், ராகவன், கார்த்திக், சுரேந்தர், பால சுப்பிரமணியம், பரத்குமார், ராகுல், தாமரை, நாகேந்திரன், கார்த்தி, சாரதி, தமிழ், கவின், ரித்தீஷ், தரன், ராமசாமி, ரங்கசாமி, குமார், சிவா, சௌந்தர், குணா, குமார், அப்துல் ரஹீம், டி.வி.கே விஸ்வ நாதன், தமுமுக முன்னாள் நகர துணை செயலாளர் கிதர் முஹம்மது,

மாவட்ட தொழில் சங்க தலைவர் அப்துல் சமது, மஜகயாசிர், சந்தோஷ், ரியாஸ், சையது, இப்ராஹிம், அதிமுக அப்துல் ஹக்கீம், அப்பாஸ் ஜோசப் ராஜ், அழகப்பன், ஆயிஷா, திவ்யா, விடிவெள்ளி, பானு உள்பட அதிமுக, டி.வி.கே உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்த அனைவரையும் தலைமை கழகத்தின் சார்பிலும், கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும், சூலூர் ஒன்றிய, சூலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணியூர் ஊராட்சி தண்ணீர் பந்தல் மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செட்டிபாளையம் பேரூர் கழகத்தின் சார்பிலும் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வாழ்த்தி வரவேற்று கழக கைத்தறித் துண்டு போர்த்தி வாழ்த்தி வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், செட்டிப்பாளையம் அப்துல் ரகீம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய முயற்சியினால்

# தாராபுரம் சட்டமன்ற தொகுதி கொளத்துப்பாளையத்தில் சிப்காட் தொழில் பூங்கா!

### அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பெருமிதம்!



சென்னை, ஜூலை 26-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியினால் தாராபுரம் சட்டமன்ற தொகுதி கொளத்துப் பாளையத்தில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்கப்பட உள்ளது என்று மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் கிராமத்தில் கடந்த 1965 ஆம் ஆண்டு முதல் அப்போதைய ஈரோடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை என்ற பெயரில் செயல்பட்டு சுமார் 1,000 நபர்கள் வேலை பார்த்து, மேற்படியார்களின் குடும்பங்கள் பயன்பட்டு வந்தன. இந்த கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பாலை தவிர்க்க முடியாத காரணங்களினால் கடந்த 2003ஆம் ஆண்டு முதல் செயல்படாமல் இருந்து வருகிறது. இந்த நூற்பாலை அமைந்த பகுதி சுமார் 57 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டு கடந்த 22 ஆண்டு காலமாக யாருக்கும் பயனில்லாமல் இருந்து வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக திராவிட மாடல் விடியல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகிய நானும் தொடர்ந்து இந்த கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பாலை இயங்கி வந்த இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத வகையிலும் ஏதாவது தொழில் துவங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம்.

எங்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.01.2025ஆம் தேதியன்று அரசாணை எண். 24ன் படி கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பாலை இயங்கி வந்த இடத்தில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்க சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணையின் படி, கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பாலை இயங்கி வந்த இடத்தில் ஒரு சிப்காட் தொழில் பூங்கா அமைத்து, மேற்படி பூங்காவில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையிலான (Zero Air Pollution, Zero Water Pollution) சூரிய ஒளி சக்தி நிறுவனம், மின்னணு தொழில் நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படவுள்ளது. மேற்படி தொழில் பூங்காவிற்கு கையகப்படுத்தப்பட்ட இடத்தில் எந்த விதமான புகை, திரவக்கழிவுகள் இல்லாத நிறுவனங்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படவுள்ளது. இதனால் பொதுமக்களுக்கோ, விவசாயத்திற்கோ, சுற்றுச்சூழலுக்கோ எவ்வித மாசும் ஏற்படாத வகையில் சிப்காட் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேற்படி சிப்காட் தொழில் பூங்காவினால் தாராபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் கூலி தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கப்பெறும். குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு கிடைக்கும். இதனால் ஏழை மக்களின் வாழ்வாதாரம் உயரும் என்பதோடு இதன்மூலம் அந்தப் பகுதியில் வசிக்கும் 10,000 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் வாய்ப்புள்ளது.

மேலும் தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு எந்த விதமான அரசு (அல்லது) அரசு சார்ந்த (அல்லது) தனியார் துறையினரின் தொழிற்சாலைகளும் பெரிய அளவில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இடம் பெறாத நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் குறிப்பாக கொளத்துப்பாளையத்தில் ஒரு சிப்காட் தொழில் பூங்கா அமைத்து அதன் மூலம் 10,000 நபர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை உருவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பாலை அமைந்துள்ள அந்த இடத்தில் அமையவுள்ள சிப்காட் தொழில் பூங்காவினால் எவ்விதமான சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் நிறுவனம் செயல்படும் என்பதையும் தி.மு.க. விடியல் அரசின் இந்த திட்டத்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து பொதுமக்கள் பெரிய அளவில் பயனடைவார்களே தவிர இந்தத் திட்டத்தால் ஒரு போதும் விவசாயிகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ, குடிநீர் பாசன நிலைகளுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது, மாறாக கொளத்துப்பாளையம் பகுதி இந்த சிப்காட் தொழில் பூங்கா அமைந்த பிறகு மாபெரும் தொழிற்சாலை அமைந்த பகுதியாக மாறி வளம் பெறும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மும்பை லெமுரியா அறக்கட்டளை—தமிழ்க்காப்போம் இணைந்து நடத்தும்

# தவத்திரு. குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நிறைவு விழா - படத்திறப்பு!

### சு.குமணராசன் தலைமை—புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

மும்பை, ஜூலை 26-

தமிழ்ப் பற்றும் மிகுந்த சமுகப் பற்றும் கொண்ட துறவி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மும்பையில் நடைபெறுகிறது.

இன்று (26.07.2025-சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் பாண்டுப், பிரைட் மேல்நிலைப் பள்ளி வளாகம் கல்வித்தந்தை தேவதாசன் அரங்கில் நடைபெறும் இவ்விழாவில் தி.மு.க கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந. கவுதமன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றார்.

இலெமுரியா அறக்கட்டளைத் தலைவர் சு.குமணராசன் தலைமையில் நடைபெறும் விழாவில் தமிழ்க் காப்போம் ஒருங்கிணைப்பாளர் இறை ச. இராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார். குன்றக்குடி அடிகளார் படத்தை மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ. கணேசன் திறந்து வைக்கிறார்.

விழாவிற்கு ஜேம்ஸ்தேவதாசன், எஸ்.அண்ணாமலை, பொற்கோ அன்பழகன், கி.தனுஸ்கோடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எழுத்தாளர் கவிஞர் புதிய மாதவி, இந்தியப் பேனா நண்பர் பேரவைத் தலைவர் மா. கருண், மராத்திய மாநில எழுத்தாளர் மன்றத் தலைவர் வதிலை பிரதாபன், டோம்பிவிலி தமிழ் மக்கள் சங்கம் நெல்லை பைந்தமிழ், இலக்கியக் கூடம் வ.ரா. தமிழ் நேசன், மகிழ்ச்சி மகளிர் பேரவை வளர்மதி கணேசன், தானே தமிழ்ச் சங்கம் கி.வீரமணி ஆகியோர் கருத்துரையாற்றுகின்றனர். பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ. இரவிச்சந்திரன் நன்றியுரையாற்றுகின்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பேராயர் இரவிகுமார் ஸ்டீபன் திராவிட மறுமலர்ச்சி நடுவம் அ. பாலசுப்பிரமணியம் திராவிடக் கருத்தியலாளர் சாலமோன் ராஜா விடுதலை சிறுத்தைகள் கட்சி டி.அப்பாதுரைதமிழ் இரயில் பயணிகள் நலச் சங்கம் ஜனா ராஜாஇளங்கோ தமிழ் இரயில் பயணிகள் நலச் சங்கம், செலின் ஜேக்கப் மூத்த நிர்வாகி, பிரைட் மேல்நிலைப் பள்ளி, பூலான்குளம் ஜெ.சுகுமாறன் தமிழ்க் காப்போம்,பெரியார் பாலா திராவிடர் கழகம் முத்தமிழ் தண்டபாணி முத்தமிழ் மன்றம்அம்பர்நாத், க.நந்த கோபால் வருவாய்த்துறை,

வெ. இராசேந்திரன் டோம்பிவிலி தமிழ் மக்கள் சங்கம், வெ. சதானந்தன் கல்யாண் நற்பணி மன்றம், வேல்முருகன் திவா தமிழ்ச் சங்கம் சுரேஷ்குமார் சமுகச் செயற்பாட்டாளர், தாராவி, அழகுராஜா கோலிவாடா, ஜஸ்டினா ஜேம்ஸ் முதல்வர், பிரைட் மேல்நிலைப் பள்ளி, முனைவர் குமாரசெல்வன் பிரைட் மேல்நிலைப் பள்ளி, அமலா ஸ்டான்லி கல்வியாளர், நங்கை குமணராசன் இலெமுரியா அறக்கட்டளை, சிறீதர் தமிழன் விழித்தெழு இயக்கம், வேலுமயில் நயினார் அம்பர்நாத், அ.மகேந்திரன் பகுத்தறிவாளர் கழகம், க.அறச்செல்வன் பகுத்தறிவாளர் கழகம், சிவ. நல்லசேகரன் முலுண்டு, சு.சுதாகரன் எழுத்தாளர் கோ.சீனி வாசகம் மலாடு தமிழ்ச் சங்கம், சுப்பிரமணியன் தானே தமிழ்ச் சங்கம் எஸ்.எஸ். தாசன் பாண்டுப் தமிழ்ச் சங்கம், உ.பன்னீர்செல்வம் விழித்தெழு இயக்கம், த.செ.குமார் தமிழர் நற்புறவுப் பேரவை, ஆ.டென்சிங் தொழிலதிபர் ப.மிக்கேல் அந்தோணி தமிழ்க்காப்போம்,

சங்கர் திராவிட் மனித நேய இயக்கம் இல.முருகன் ஜெரிமெரி தமிழ்ச் சங்கம், சுமதி மதியழகன் மகிழ்ச்சி மகளிர் பேரவை கவிஞர் இராசு. மாதவன் எழுத்தாளர், நெல்லை நாதன் நவி மும்பை டி.எம்.எஸ். நரசிம்மன் பின்னணிப் பாடகர், சிற்றரசு பகுத்தறிவாளர் கழகம் டாக்டர் பெருமாள் தானே தமிழர் சங்கம், வழக்கறிஞர் க.கணேசன் எழுத்தாளர் இல.பாஸ்கர் மலாடு தமிழர் நலச் சங்கம், இர.இராசேந்திரன் ஆரே காலனி டாக்டர் சீனிவாசன் உலகத் தமிழ்க் கழகம் ஆகியோர் இதில் பங்கேற்றுச் சிறப்பு செய்கின்றனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஒசூர் மாநகராட்சி, ஒசூரில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், அமைக்கப்பட்ட மருத்துவ முகாமில், பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் , ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் பழைய மீன் மார்க்கெட் அருகில் மாநகரம் தி.மு.க சார்பில் திராவிட மாடல் முதல்வரின் நாடு போற்றும் நான்காம் ஆண்டு சாதனைகள் விளக்க "புதுகை பூபாளம்" கலைக்குழு பிரச்சாரத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார். மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேலு, மாநகர செயலாளர், மயிலாடுதுறை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், துணை மேயர் சு.ப.தமிழழகன், ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநிலக் கழக நிர்வாகிகள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், மண்டல குழு தலைவர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். நிறைவாக பொதுக்குழு உறுப்பினர் எல்.ராஜேந்திரன் நன்றியுரையாற்றினார்.



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் பேரூராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடைபெற்றது இதில் மாற்றுத் திறனாளி மாரியம்மாளுக்கு மூன்று சக்கர சைக்கிள் கேட்டு மனு வழங்கினார். இதனைத் தொடர்ந்து கோரிக்கை மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 1 மணி நேரத்தில் மாற்றுத்திறனாளி மாரியம்மாவுக்கு உடனடியாக 3 சைக்கிள் வாகனம் வழங்கப்பட்டது. இதில் நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், பேரூர் கழக செயலாளர் எம். எஸ்.ஏ.முகமதுரிஷா ஆகியோர் பங்கேற்றனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் நாமக்கல்கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல்மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனைப்படி நாமக்கல் திருச்சி சாலையில்உள்ளகவிஞர்ராமலிங்கம்அரசுமகளிர்கல்லூரிவாயில்முன்பாகமாவட்டமாணவரணிசார்பில் மாவட்டமாணவர்அணிதுணைஅமைப்பாளர்கள்கடல்அரசன்கார்த்திதலைமையில்,எம்.என்.டி.கௌதம், சங்கீதா ஆகியோர் முன்னிலையில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.